21 J
Eastern Universit

# EASTERN UNIVERSITY SRI LANKA
## FIRST EXAMINATION IN ARTS & CULTURE - 1999/2000
## (EXTERNAL DEGREE -DEC 2003 – JAN 2004)
## ECO 101 PRINCPLES OF ECONOMICS

ஏதாயினும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக — நேரம்: 3மணி

---

01) பின்வருவனவற்றை சுருக்கமாக விளக்குக.

1. இலவசப் பொருள் பொருளாதாரப் பொருள் என்பவற்றை வேறுபடுத்துக.
2. மாறா அளவுத்திட்ட விளைவு என்பதில் இருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?
3. மொத்தப் பயன், எல்லைப்பயன் என்பவற்றை வேறுபடுத்துக.
4. சமநிலை விலை என்ற பதத்தினை வரையறுக்குக.
5. பண்டமாற்று முறையின் நான்கு பண்புகளைத் தருக.
6. பொருளாதாரம் ஒன்றின் மொத்த தேசிய உற்பத்தி 2001ல் ரூபா 320,000 மில்லியனில் இருந்து 2003ல் ரூபா 350,000 மில்லியனாக அதிகரித்தது. ஆனால் உண்மையில் தலா தேசிய உற்பத்தி விழ்ச்சியடைந்தது. இது சாத்தியமாகுமா? விளக்குக.
7. சந்தர்ப்பச் செலவு என்ற பதத்தில் இருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?
8. பொருளாதார உலகமயமாதல் என்ற பதத்தினை வரையறுக்குக.

(20 புள்ளி)

02)1. கேள்விக்கோட்டின் அசைவு, நகர்வு என்பவற்றினை வேறுபடுத்தி விளக்குக.

(06 புள்ளி)

2. உதாரணங்களைப் பயன்படுத்தி வருமான விளைவு பதிலீட்டு விளைவு என்பவற்றை வேறுபடுத்துக.

(08 புள்ளி)

3. விலைசார் கேள்வி நெகிழ்ச்சி என்பதனை வரயறை செய்து உதாரணங்களுடன் விளக்குக.

(06 புள்ளி)

---

03). பின்வரும் அட்டவணை தனிப்பட்ட ஒருவரின் இரு உணவுப் பொருட்களுக்கான வாராந்த எல்லைப்பயன்பாட்டினை காட்டுகின்றது. தரப்பட்ட மொத்த வருமானம் ரூபா 36 ஆகும்.

| விலையும் அளவும் | இறைச்சி (ரூபா- 4) மொத்த பயன் | பழம் (ரூபா- 4) மொத்த பயன் |
|---|---|---|
| 1 | 28 | 16 |
| 2 | 54 | 28 |
| 3 | 78 | 36 |
| 4 | 98 | 43 |
| 5 | 110 | 48 |
| 6 | 118 | 51 |
| 7 | 122 | 52 |
| 8 | 124 | 52 |

நுகர்வோன் தனது பயன்பாட்டினை உச்சப்படுத்துவதற்கு விரும்புகிறான் எனவும், முழு வருமானங்களும் இரண்டு பொருட்கள் சார்பாகவும் பயன்படுத்தப்படுகின்றது எனவும் கருதிக்கொள்க.

அட்டவணையில் தரப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றிற்கு விடை தருக.

a. i.நுகர்வோன் சமநிலைக்கான நிபந்தனைகளை சுருக்கமாக விளக்குக.

(04 புள்ளி)

ii. –மேற்படி பொருளொன்றின் விலை வீழ்ச்சியடையும் போது,
- தரப்பட்ட பொது விலை மட்டம் வீழ்ச்சியடையும் போது,

சமநிலை எவ்வாறு மாற்றமடையும்

(08 புள்ளி)

b. நுகர்வோன் சமநிலைப்புள்ளியை கணிப்பிடுக. (04 புள்ளி)

LIB
21 /
Eastern Univ

c. சமபயன் வளைகோட்டு முறையில் நுகர்வோர் கொண்டிருக்கக் கூடிய பண்புகளை விளக்குக.

(04 புள்ளி)

04) a. நிரம்பல் விதியையும், அதன் நிபந்தனைகளையும் விளக்குக.

(05 புள்ளி)

b. 'X' என்ற நிறுவனம் ஒன்றின் கேள்வி, நிரம்பல் தொழிற்பாடுகள் கீழே தரப்படுகின்றன.

Qd = 1850 – 40p

Qs = 550 = 60p

1.சமநிலை விலை, சமநிலைத் தொகை என்பவற்றைக் காண்க.

(05 புள்ளி)

2. விலை 18/= ஆக மாறுமாயின் சமநிலைக்கு யாது நிகழும்?

(05 புள்ளி)

3. .விலை 19/= வில் இருந்து 22/= ஆக அதிகரிக்கும் போது கேள்வி நெகிழ்ச்சியைக் கணிப்பிடுக.

(05 புள்ளி)

05) சுருக்கமாக விளக்குக.

1. தனிநபர் வருமானம், தலா வருமானம் என்பவற்றில் இருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?
2. மொத்த உள்நாட்டு உற்பத்தி, மொத்த தேசிய உற்பத்தி என்பவற்றை வேறுபடுத்துக
3. வரிப்பெருக்கி தொடர்பாக நீர் கருதிக் கொள்வது யாது?
4. தன்னிச்சையான முதலீடு என்ற எண்ணக்கருவினை விளக்குக.
5. MPC க்கும் பெருக்கிக்கும் இடையிலான தொடர்பினை விளக்குக.
6. மெய்த்தேசிய வருமானம் என்ற எண்ணக்கருவினை விளக்குக.

(20 புள்ளி)

06) 1. "வருமான வட்டப்பாய்ச்சல்" என்பதில் இருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?

(04 புள்ளி)

2. அரசாங்கத் தலையீடுள்ள மூடப்பட்ட பொருளாதார மாதிரி ஒன்றின் வருமான வட்டப்பாய்ச்சல் முறையினை விளக்குக.

(06 புள்ளி)

3. திறந்த பொருளாதாரம் ஒன்றின் வருமான வட்டப்பாய்ச்சல் முறை எவ்வாறு வேறுபடுகின்றது?

(10 புள்ளி)

07)1. இன்றைய பொருளாதாரத்தில் பணம் கொண்டிருக்க வேண்டிய பொருளாதார முக்கியத்துவத்தினை விளக்குக.

(05 புள்ளி)

2. மத்திய வங்கி ஒன்று எவ்வாறு பண நிரம்பலைக் கட்டுப்படுத்துகின்றது என்பதனை விளக்குக.

(05 புள்ளி)

3. ஒரு நாட்டின் பண நிரம்பலைக் கட்டுப்படுத்தல் தொடர்பான அவசியத்தன்மையினை விவாதிக்குக.

(10 புள்ளி)

07) "3ம் மண்டல நாடுகளில் பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவிக்கின்ற பிரதான தந்திரோபாயமாக வெளிநாட்டு நேரடி முதலீடுகள் கொள்ளப்படுகின்றது" இலங்கையை விசேட கவனத்தில் கொண்டு இக் கூற்றினை ஆராய்க.

(20 புள்ளி)